**தலைப்பு 274 - மாவட்ட செயலகம், அநுராதபுரம்**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2013 ஆம் ஆண்டு**

---

## 1.1 மாவட்ட செயலகத்தின் பிரதான செயற்பணிகள்

(அ) வறுமையை ஒழிப்பதில் முன்னிற்றல், விநியோகம் மற்றும் முகாமைத்துவம்.

(ஆ) அனர்த்த நிவாரணம் மற்றும் புனர் நிர்மாண செயற்திட்டங்களின் நிர்வாகம்.

(இ) அபிவிருத்திச் செயற்திட்டங்களை திட்டமிடுதல் மற்றும் கட்டுப்படுத்துதல்.

(ஈ) தேர்தல்களை ஒருங்கிணைத்தல்.

(உ) மாவட்ட செயற்திட்டங்களின் நிர்வாகமும் செயற்படுத்தலும்.

(ஊ) வருமானங்களைச் சேகரித்தல்.

(எ) பிரிவுகள் மட்டத்திலும் கிராமிய மட்டத்திலும் உத்தியோகத்தர்கள் மற்றும் அமைப்புக்களின் ஊடாக அரசாங்கத்தின் நடவடிக்கைகளை அமுல்படுத்தலும் சட்டரீதியாக பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுதல்.

(ஏ) மாகாண சபையின் பணிகளிற்கு உதவுதல்.

## 1.2 மாவட்ட செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்

(அ) பதவிய
(ஆ) கெபிதிகொல்லேவ
(இ) மதவாச்சி
(ஈ) ரம்பேவ
(உ) ஹொரவபொதான
(ஊ) கலன்பிந்துனுவெவ
(எ) கஹடகஸ்திகிலிய
(ஏ) கிழக்கு நுவரகம்பலாத
(ஐ) நாச்சியாதீவு
(ஒ) மத்திய நுவரகம்பலாத
(ஓ) நொச்சியாகம
(ஔ) மஹவிலச்சிய
(க) தலாவ
(கா) தம்புத்தேகம
(கி) இராஜங்கனை
(கீ) கல்நேவ
(கு) இபலோகம
(கூ) திரப்பனே
(கெ) மிஹிந்தலை
(கே) பலுகஸ்வெவ
(கொ) கெகிராவ
(கோ) பலாகல

### 1.3 கணக்காய்வின் நோக்கெல்லை

அநுராதபுரம் மாவட்ட செயலகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 நவம்பர் 25 ஆந் திகதி மாவட்டச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறு தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.4 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 1.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் அநுராதபுரம் மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) முதல் (உ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 1.6 முதல் 1.14 வரையிலான பந்திகளில்

குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மாவட்டச் செயலகம் மற்றும் 03 பிரதேச செயலகங்களினால் பொறுப்புக்கள் பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களிற்காக நிலையான சொத்துக்கள் பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

மாவட்டச் செயலகத்திற்காக வழங்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 665,649,321 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் இதில் ரூபா 664,067,738 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 1,581,583 அல்லது 0.24 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| **செலவு** | **2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான** | | | **சேமிப்பு தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக** |
|---|---|---|---|---|
| | **தேறிய நிதி ஏற்பாடு** | **பயன்பாடு** | **சேமிப்புக்கள்** | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டுவருபவை | 626,224,321 | 625,418,369 | 805,952 | 0.13 |
| மூலதனம் | 39,425,000 | 38,649,369 | 775,631 | 1.97 |
| **மொத்தம்** | **665,649,321** | **664,067,738** | **1,581,583** | **0.24** |

**(ii) பாதீட்டு முரண்கள்**

---

04 செலவின விடயங்களுக்காக மிகையான நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 9 சதவீதம் முதல் 17 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

**(iii) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் நிதிஏற்பாட்டின் பயன்பாடு**

---

பல்வேறு செயற்பாடுகளுக்காக ஏனைய 30 அமைச்சுக்கள் மற்றும் 21 திணைக்களங்களினால் ரூபா 4,502,176,901 கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடுகள் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதி ஏற்பாட்டிலிருந்து முறையே ரூபா 2,641,230,183 மற்றும் ரூபா 1,616,776,533 தொகைகள் என ரூபா 4,258,006,716 கூட்டுத்தொகையானது பயன்படுத்தப்பட்டிருந்தது. 24 அமைச்சுக்கள் மற்றும் 18 திணைக்களங்களினால் அனுப்பி வைக்கப்பட்டிருந்த ரூபா 4,489,900,568 கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 4,240,731,780 கூட்டுத்தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டிலிருந்து 0.04 சதவீதத்திலிருந்து 91.67 சதவீதம் வரையான வீச்சளவில் நிதி ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. 04 அமைச்சுக்கள் மற்றும் 02 திணைக்களங்களினால் அனுப்பிவைக்கப்பட்டிருந்த ரூபா 1,371,262 நிதி ஏற்பாடு முழுவதும் பயன்படுத்தப்பட்டிருந்தது. 02 அமைச்சுக்கள் மற்றும் ஒரு திணைக்களத்திகனால் அனுப்பிவைக்கப்பட்டிருந்த ரூபா 10,905,071 கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடினை ரூபா 4,998,603 இனால் மிகைத்து ரூபா 15,903,674 பயன்படுத்தப்பட்டிருந்தது.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

---

27401 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,045,457 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்காக மாவட்டச் செயலகம் மேற்கொண்டிருந்த நடவடிக்கைகள் போதியளவான மட்டத்தில் காணப்படவில்லை.

**(ஈ) கட்டுநிதிக் கணக்கு**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகத்தின் கட்டுநிதிக் கணக்கில் ரூபா 626,108 மீதி காணப்பட்டதுடன், அதில் ரூபா 210,872 ஆன மீதிகள் 2010 ஆம் ஆண்டிலிருந்து நிலவி வந்திருந்தது.

**(உ) பொது வைப்புக் கணக்கு**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 04 பிரதேச செயலகங்களில் வைப்புச் செய்யப்பட்டு 02 ஆண்டுகளைக் கடந்த ரூபா 298,847 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

**வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎவ்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் 1.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

**பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

மாவட்டச் செயலத்திற்குச் சொந்தமாகக் காணப்பட்ட பின்வரும் சொத்துக்கள் பயன்படுத்தப்படாது அல்லது குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டன.

| சொத்துக்களின் வகை | அலகுகளின் எண்ணிக்கை | பயன்படுத்தப்படாத அல்லது குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்ட காலம் |
|---|---|---|
| | | **ஆண்டுகள்** |
| கட்டிடம் | 01 | 05 |
| இயந்திராதிகள் | 01 | 02 |

**1.8 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண அறிவுறுத்தல்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி<br>ரூபா | இணங்காமைகள் |
|---|---|---|---|
| (அ) | **நியதிச்சட்ட ஏற்பாடுகள்** | | |
| | (i) 2009 மே 06 ஆந் திகதிய 1600/18 ஆம் இலக்க வர்த்தமானி | 264,355 | திரப்பனே பிரதேச செயலகத்தினால் கருங்கல் அகழ்விற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 264,355 அரசாங்க கட்டணம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிலுவையாக காணப்பட்டது. |
| | | 436,250 | கெபிதிகொல்லாவ பிரதேச செயலக பிரிவில் கருங்கல் அகழ்விற்காக அறவிடப்பட வேண்டிய அரசாங்க கட்டணம் குறித்த வீதத்தின் பிரகாரம் அறவிடப்பட்டிராமையால் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளிற்குரிய ரூபா 436,250 அரசாங்க கட்டணம் குறைவாக அறவிடப்பட்டிருந்தது. |
| | | 469,000 | கெகிராவ பிரதேச செயலக பிரிவில் கருங்கல் அகழ்விற்காக அரசாங்க கட்டணம் அறவிடப்படுகையில் ரூபா 469,000 மேலதிகமாக அறவிடப்பட்டிருந்தது. |
| | (ii) 2011 இன் 22 மற்றும் 2013 இன் 18 ஆம் இலக்க (திருத்திய) அதிகாரச் சட்டங்களினால் திருத்தப்பட்ட 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டம் | - | கெபிதிகொல்லேவ மற்றும் கெகிராவ பிரதேச செயலாளர்களின் ரூபா 50,000 இற்கு மேற்பட்ட வருமானத்தின் மீது உழைக்கும் போதே செலுத்தும் வரி முறையின் கீழ் வரிகள் அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட் டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை<br>-----------------------------------------------<br>XIX ஆம் அத்தியாயத்தின் 7.2 ஆம் பிரிவு | - | அநுராதபுரம் மாவட்டச் செயலகத்தறிகுச் சொந்தமாகக் காணப்படுகின்ற 09 உத்தியோகபூர்வ இல்லங்களில் 05 ஆண்டுக் குத்தகைக் காலத்திற்கும் மேலாக குடியிருக்கும் உத்தியோகத்தர்களை அந்த இல்லங்களிலிருந்து அகற்றுவதற்கு அல்லது தண்டப் பணத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கவில்லை. |
| (இ) | பொது நிர்வாக சுற்றறிக்கை<br>-----------------------------------------------<br>2007 ஒக்தோபர் 05 ஆந் திகதிய பொ/நிர்/க/ஓய்வூதிய கடிதத்தின் (VII) ஆம் பந்தி | - | பிரதேச செயலகப் பிரிவுக்கு உரித்தான சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் குடியிருக்கும் ஓய்வூதியம் பெறுகின்ற மற்றும் விதவைகள் அநாதைகள் நலனாளிகளின் மரணித்த நபர்கள் தொடர்பான அறிக்கை யொன்று கிராம உத்தியோகத்தரினால் ஒவ்வொரு மாதத்திற்கு ஒருமுறை பிரதேச செயலாளர்களிற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் மரணமடைந்தோரின் ஓய்வூதியம் மரணித்த பின்னரும் வங்கிக்கு அனுப்பி வைக்கப் பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |
| (ஈ) | 2013 திசெம்பர் 12 ஆந் திகதிய ஓய்வூதிய/பா19/ஹானி/பொது ஆம் இலக்க ஓய்வூதிய பணிப்பாளரின் கடிதம் | - | மஹவிலச்சிய பிரதேச செயலகத்தினால் மிகையாகச் செலுத்திய ஓய்வூதியத்தை மீள அறவிடுதல் தொடர்பான விபரங்கள் காலாண்டுக்கு ஒருமுறை ஓய்வூதிய திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக் கவில்லை. |

## 1.9 செயற்திட்ட அமுலாக்கலிலுள்ள நலிவுகள்

செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிட்டிருந்தமை, செயற்திட்டங்களை முடிவுறுத்தாது கைவிட்டிருந்தமை மற்றும் செயற்திட்ட தாமதங்கள் தொடர்பாக தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடுதல்

ரூபா 2,469,589 மதிப்பீட்டுக் கிரயம் கொண்ட 07 பிரதேச செயலகங்களிற்குரிய 07 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது அமுலாக்கப்படாது கைவிடப்பட்டிருந்தன.

### (ஆ) செயற்திட்டங்களை பூரணப்படுத்தாது கைவிடுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ரூபா 2,025,509 மதிப்பீட்டுக் கிரயம் கொண்ட கலன்பிந்துனுவெவ பிரதேச செயலகப் பிரிவின் கல்வடுவாகம கீழ் பிரிவிலுள்ள பாலத்தின் நிர்மாணச் செயற்திட்டம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 1,589,073 செலவிடப்பட்ட பின்னர் பூரணப்படுத்தப்படாது கைவிடப்பட்டிருந்தது.

(ii) தமுத்தேகம பிரதேச செயலக அதிகார பிரதேசத்தில் 2008 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த ரூபா 2,424,740 பெறுமதியான 05 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டிற்குப் பின்னரான ஆண்டுகளில் மதிப்பீடுகள் வழங்கப்பட்டிருக்காமை காரணமாக பூரணப்படுத்தப்படாத நிலையில் காணப்பட்டன.

### (இ) பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், செயன்முன்னேற்றம் காணப்படாத செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கெபிதிகொல்லாவ கலாச்சார நிலையத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 9,175,000 மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 அளவில் ரூபா 2,458,009 ஒப்பந்தகாரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. கற்சுவர் கட்டப்பட்டு கொங்ரீட் தூண்கள் நிர்மாணிப்பது வரை மாத்திரம் வேலைகள் நிறைவேற்றப்பட்டிருந்தன.

(ii) தம்புத்தேகம பிரதேச செயலகத்தினால் 2012 கமநெகும செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்த 02 பல்நோக்கு கட்டிடங்களிற்கு அத்தியாவசிய

தேவையாக காணப்பட்ட கழிவறை, மின்சாரம், நிறம் பூசுதல் மற்றும் வாயில் கதவு பொருத்துதல் என்பன நிறைவேற்றப்படாதிருந்தமை பௌதீக பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது.

(iii) உலக சுகாதார அமைப்பினால் கலன்பிந்துனுவெவ பிரதேச செயலக பிரிவில் சமூக பொருளாதார தாக்கங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பரிந்துரைகளை அமுல்படுத்தலின் கீழ், சிறுநீரக நோயாளர்களிற்காக உதவிகளை வழங்குவதற்கு 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் ரூபா 335,000 வழங்கப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியான 2014 செப்தெம்பர் 18 ஆந் திகதி வரை அப் பணம் குறித்த குறித்த பணிகளிற்காக பயன்படுத்தப்படாது பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

(iv) 2012 திசெம்பர் மற்றும் 2013 சனவரி மாதங்களில் ஏற்பட்டிருந்த வெள்ளம் காரணமாக முழுமையான சேதம் மற்றும் பகுதியளவில் சேதம் என்பவற்றின் கீழ் வீடுகளை இழந்தவர்களிற்கு வீடுகளை வழங்குவதற்காக அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக 30 நலனாளிகளிற்கு வீடமைப்பு உதவிகளை வழங்குவதற்காக ரூபா 1,191,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அந்த நிகழ்ச்சித்திட்டத்தின் இரண்டாம் மற்றும் மூன்றாம் தவணைப் பணமாக வழங்கப்பட்டிருந்த ரூபா 696,600 தொகை கணக்காய்வுத் திகதியான 2014 மார்ச் 04 ஆந் திகதி வரையிலும் குறித்த நலனாளிகளிற்குச் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.10 செயலாற்றல்

2013 ஆம் ஆண்டிற்கான மாவட்டச் செயலகத்தின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

### (அ) காணிப் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட்டிராமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நாச்சியாதீவு, கெகிராவ மற்றும் கலன்பிந்துனுவெவ பிரதேச செயலக அதிகாரப் பிரதேசங்களில் 01 முதல் 03 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட காலமாக தீர்த்துவைக்கப்படாத 15 காணிப் பிரச்சினைகள் காணப்பட்டன.

(ii) கெபிதிகொல்லாவ பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் படிப் படிவங்களை பெற்றுக்கொள்வதற்குத் தகைமைபெற்றிருந்த 3,886 காணித்

துண்டுகளிற்காக படிப் படிவங்களைத் தயாரிப்பதற்கு அத்தியாவசியமாகவுள்ள வரைபடங்களை பெற்றுக்கொள்வதற்கு வேலைத்திட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக படிவப் படிவங்கள் வழங்கப்படுதல் திருப்திகரமான நிலையில் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) கெபிதிகொல்லாவ பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் காணிக் கச்சேரியின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்த ஏறத்தாழ 12 காணி உறுதிகள் 02 ஆண்டுகால தாமதத்துடன் காணி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கான உத்தரவுப் பத்திரங்களைத் தயாரித்தல் கணக்காய்வுத் திகதியான 2014 செப்தெம்பர் 22 ஆந் திகதி வரை இடம்பெற்றிருக்கவில்லை.

(iv) காணிகள் மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சினால் 2008 ஆகஸ்ட் 20 ஆந் திகதிய 2008/04 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் கலன்பிந்துனுவெவ பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் காணிக் கச்சேரியின் மூலம் 2013 சனவரி 21 ஆந் திகதி 10 காணிகளிற்காக நீண்டகால உத்தரவுப் பத்திரங்களை வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2014 செப்தெம்பர் 16 ஆந் திகதி வரை அக் காணிகளிற்கு நீண்டகால உத்தரவுப் பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) சுடு கலன்களிற்கு அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளாமை தொடர்பாக நடவடிக்கை எடுக்காமை**

அநுராதபுரம் மாவட்டத்தில் 2014 மே 28 ஆந் திகதி வரை வழங்கப்பட்டிருந்த 1,920 சுடு கலன் அனுமதிப்பத்திரங்களிடையே 01 தொடக்கம் 07 ஆண்டு கால வீச்சில் அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளத் தவறியிருந்த 178 சுடு கலன்கள் சம்பந்தமாக ஆய்ந்தறிந்து தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) வருமானங்களைச் சேகரிப்பதிலுள்ள நலிவுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) காணி வருமானங்கள்**

கெகிராவ பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் மாகாண சபை காணிகளைப் பெற்றுக்கொண்டிருந்த 32 நலனாளிகளிடமிருந்து காணி வரியாக ரூபா 3,311,644 தொகை 01 முதல் 26 வருட கால வீச்சில் நிலுவையாக காணப்பட்டது. அவ்வாறே கலன்பிந்துனுவெவ பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த மத்திய

அரசாங்கத்திற்குச் சொந்தமான குத்தகைக் காணிகளிலிருந்து 04 குத்தகை உரித்தாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 448,020 தொகை கணக்காய்வுத் திகதியான 2014 செப்தெம்பர் 22 ஆந் திகதி வரை நிலுவையாக காணப்பட்டது.

**(ii) வாகன அனுமதிப்பத்திர வருமானங்கள்**

கெகிராவ மற்றும் மஹவிலச்சி பிரதேச செயலகங்களில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிலுவையாக காணப்பட்ட வாகன அனுமதிப்பத்திர வருமானங்கள் தண்டப்பணத்துடன் ரூபா 2,350,955 ஆகக் காணப்பட்டது.

**(ஈ) பால் குவளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் செயன்முன்னேற்றம்**

சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் வலுவூட்டல் அமைச்சுச் செயலாளரின் 2008 பெப்ரவரி 13 ஆந் திகதிய 2008/11 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் வயது 24 மாதங்களிற்கு மேற்பட்ட மற்றும் 60 மாதங்களிற்கு குறைந்த பிள்ளைகளிற்காக பால் குவளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் 06 பிரதேச செயலகப் பிரிவுகளில் நடாத்தி வரப்படுகின்ற 225 முன்பள்ளிகளில் அமுல்படுத்தப்பட வேண்டியிருந்தது. அந்த நிகழ்ச்சித்திட்டம் குறித்த பிரதேச செயலகப் பிரிவுகளில் நடாத்திவரப்படுகின்ற 153 முன்பள்ளிகளில் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(உ) கடன்களை அறவிடுவதிலுள்ள பலவீனங்கள்**

சீவனோபாய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2007 ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரை நலனாளிகளிடமிருந்து 50 சதவீத கடன்களை அறவிடும் அடிப்படையில் 21,423 செயற்திட்டங்களிற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 130,733,535 தொகையில் 2013 திசெம்பர் 31 அளவில் ரூபா 22,498,793 இன்னும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

**(ஊ) ஓய்வூதியம் தொடர்பான பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நாச்சியாதீவு பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் ஓய்வூதியம் பெறுவோரின் 488 கோவைகளில் 2015 திசெம்பர் 12 ஆந் திகதிய 6/2004(ix) ஆம் இலக்க மற்றும் 2006 மார்ச் 20 ஆந் திகதிய 2/2006 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கைகளின் பிரகாரம் ஏறத்தாழ 100 கோவைகளின் ஓய்வூதிய முரண்பாடுகள் நீக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) தம்புத்தேகம மற்றும் தலாவ பிரதேச செயலகங்களில் 15 ஓய்வூதியம் பெறுவோர்களிற்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,273,691 கணக்காய்வுத் திகதியான 2014 மார்ச் 04 ஆந் திகதி வரை அறவிடப்பட வேண்டியிருந்தது.

(iii) கெகிராவ வலயக் கல்வி அலுவலகத்தினால் 2006 மார்ச் 20 ஆந் திகதிய 2/2006 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கையினை தவறான அடிப்படையில் கருதி ஓய்வூதியம் கணிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 1,636,931 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**1.11 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

மாவட்டச் செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல்வாங்கல்கள் சர்ச்சைக்குரியவையாகக் காணப்பட்டன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான கொடுக்கல் வாங்கல்களில் சில கீழே தரப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டில் கெகிராவ பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மல்தேனிபுர வீதியின் 08 ஆவது ஒழுங்கையில் 50 மீற்றர்களிற்கு கொங்கிரீட் கற்களை பரப்பி அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 588,130 செலுத்தப்பட்டிருந்தது. இந்த உப வீதி ஒரேயொரு நலனாளிக்காக மாத்திரம் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தமை பௌதீக பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது. பிரதான உப வீதி மற்றும் 08 ஆவது ஒழுங்கையின் எஞ்சிய பகுதியினை அபிவிருத்தி செய்வதற்காக 2014 ஆம் ஆண்டில் நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டு நிதி ஏற்பாடுகள் செய்துகொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரஜரட நவோத்ய 2013 நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கெபிதிகொல்லாவ பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் ஹெந்தேகம வானேவத்த முதல் கோலிபெந்தவெவ வரை ரூபா 485,110 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த வீதி அதன் ஆரம்பம் முதல் இறுதி வரை வீடுகள் மற்றும் குடியிருப்புகள் காணப்படாத குள காட்டுப்பகுதியின் மத்தியில் நிர்மாணிக்கப்பட்டு இறுதி 100 மீற்றர்கள் தனியார் காணியினை ஊடறுத்து வீடொன்றின் நுழைவாசலில் முடிவுறும் வகையில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இச் செயற்திட்டம் நலனாளி ஒருவரின் வீட்டிற்கு நுழைவு பாதையொன்றை தயாரித்து வழங்குவதற்கு பயன்படுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) கலென்பிந்துனுவெவ மற்றும் கெபிதிகொல்லாவ பிரதேச செயலகங்களினால் மேற்கொள்ளப்பட்டிருந்த முன்பள்ளி அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படாத வேலைகளிற்காக கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்த

சந்தர்ப்பங்கள் தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்டன. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(i) கெபிதிகொல்லாவ பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள அ/திம்ரிவெவ வித்தியாலய புதுப்பித்தல் வேலையின் இறுதிக் கொடுப்பனவு உறுதிச்சீட்டிலுள்ள 05 ஆம் விடய இலக்கத்தின் பிரகாரம் 40x40x5 மி.மீ. பருமன் (Angle Iron) இரும்பு கம்பிகளினால் சட்டம் தயாரிக்கப்பட்டு 50x50 மி.மீ. உற்பத்தி செய்யப்பட்ட வலைகளைக் கொண்டு தயாரிப்பதற்கு 21.6 சதுர மீற்றர்களிற்காக சதுர மீற்றரொன்றுக்கு ரூபா 4,089 வீதம் ரூபா 88,322 செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், பௌதீக அளவீடுகளின் படி அந்த வேலை விடயம் நிறைவேற்றப்பட்டிருந்த அளவு 19.89 சதுர மீற்றர்களாக காணப்பட்டமையால் 1.71 சதுர மீற்றருக்காக ரூபா 6,992 நிறைவேற்றப்படாத வேலைக்காக செலுத்தப்பட்டிருந்தது.

(ii) இரண்டு பாடசாலைகளின் மதிப்பிடப்பட்ட 04 வேலை விடயங்களிற்காக பொருத்தப்பட வேண்டிய ரூபா 61,153 மின்சார சாதனங்கள் பொருத்தப்படாது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(iii) 04 பாடசாலைகளின் கொடுப்பனவு அறிக்கைகளின் படி கம்பி வேலிகளை நிர்மாணிக்கையில் 06 தூண்களிற்கு இடையில் சுமைதாங்கும் தூண்கள் வைக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு வைக்கப்படாது மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டிருந்த முழுத்தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. சுமைதாங்கும் தூண்களிற்கான மதிப்பீட்டுத் தொகையினை வேறுபடுத்தி இனங்காண முடியவில்லை.

(ஈ) விவசாய அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் மாவட்ட விவசாய பணிப்பாளரால் அமுலாக்கப்பட்ட போகத்தின் பெரிய வெங்காய பயிர்ச் செய்கைக்கான விவசாயிகளின் 50 சதவீத பங்களிப்பாக ரூபா 536,250 கிடைத்திருந்தது. இத் தொகை கணக்காய்வுத் திகதியான 2014 யூன் 10 ஆந் திகதி வரை 2 ½ மாதங்கள் மாவட்டச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்படாமலும் காசுப் புத்தகத்தில் பதியப்படாதும் மாவட்ட விவசாய பணிப்பாளரின் பொறுப்பில் வைக்கப்பட்டிருந்தது.

### 1.12 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மாவட்டச் செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல்வாங்கல்கள் முறையற்றவையாகக் காணப்பட்டன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்களில் சில கீழே தரப்படுகின்றன.

(அ) லங்காராம விகாரையின் கூரையினது புனரமைப்பு நடவடிக்கைகளிற்காக (இரண்டாம் கட்டம்) ரூபா 4,364,074 மதிப்பீடொன்றின் அடிப்படையில் கூறுவிலைகள் கோரப்பட்டிருந்தன. கூறுவிலைகள் கோரப்பட்ட பின்னர் அதற்காக 15 கூறுவிலைதாரர்கள் முன்வந்திருந்தனர். அந்த கூறுவிலைகளிடையே நிர்மாண நிறுவனமொன்றினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 3,712,590 இற்கான கூறுவலையானது 06 ஆவது குறைந்த விலையாகக் காணப்பட்டிருந்த போதிலும், அது கொள்வனவுக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், இதற்காக ஆகக்குறைந்த விலையினைச் சமர்ப்பித்திருந்த அக் காலப்பகுதியில் நொச்சியாகம மற்றும் ராஜாங்கனை பிரதேச செயலகங்களில் மூன்றாம் கட்ட ஒப்பந்த வேலைகளில் ஈடுபட்டிருந்த வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 3,020,669 கூறுவிலை மதிப்பீட்டினைக் காட்டிலும், 30 சதவீதம் குறைவாகக் காணப்பட்டமையால் நிராகரிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக ரூபா 688,921 நிதிசார் நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) நுவரகம கிழக்கு பிராந்திய பிரதேச செயலகத்தினை நிர்மாணிப்பதற்காக கூறுவிலை கோரப்பட்டிருந்ததுடன் அதற்காக 10 கூறுவிலைதாரர்கள் முன்வந்திருந்தனர். அந்த கூறுவிலைகளிடையே 02 ஆவது குறைந்த கூறுவிலையான ரூபா 3,494,452 கூறுவிலையினைச் சமர்ப்பித்திருந்த நிறுவனம் கொள்வனவுக் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இருப்பினும், இதற்காக ஆகக்குறைந்த விலையினைச் சமர்ப்பித்திருந்த அக் காலப்பகுதியில் நொச்சியாகம மற்றும் ராஜாங்கனை பிரதேச செயலகங்களில் 03 ஆம் கட்ட ஒப்பந்த வேலைகளில் ஈடுபட்டிருந்த வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 3,317,270 கூறுவிலை மதிப்பீட்டினைக் காட்டிலும், 23 சதவீதம் குறைவாகக் காணப்பட்டமையால் நிராகரிக்கப்பட்டிருந்தது. கொள்வனவுக் குழுவினால் முதலாவது ஆகக்குறைந்த கூறுவிலை நிராகரிக்கப்பட்டிருந்தமை காரணமாக ரூபா 177,181 நிதிசார் நட்டம் ஏற்பட்டிருந்தது.

(இ) முன் பள்ளி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 12 பாடசாலைகளை புதுப்பிப்பதற்காக பொருத்தப்பட்டிருந்த ரூபா 212,466 மின்சார பாகங்கள் அங்கீகரிக்கப்பட்ட பொருள் விபரங்களில் குறிப்பிடப்பட்டிருந்த நியமங்களுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

**1.13 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்பட்டிருந்த சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்களின் விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) கலென்பிந்துனுவெவ பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்திலுள்ள கல்வடுவாகம கீழ்ப் பகுதியிலுள்ள பாலத்தின் நிர்மாண வேலைகளின் ஒரு பகுதியை பூரணப்படுத்துவதற்காக ரூபா 1,583,654 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், எஞ்சிய வேலைகளை பூரணப்படுத்துவதற்காக 2014 ஆம் ஆண்டில் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருக்காமை காரணமாக செயற்திட்டத்தின் இறுதிவரை செய்யப்பட்ட செலவினத்திலிருந்து எவ்விதப் பயனும் கிடைத்திருக்கவில்லை.

(ஆ) விவசாய அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் மாவட்ட விவசாய பணிப்பாளரினால் 03 பிரதேச செயலக பிரிவுகளிலுள்ள 422 விவசாயிகளிற்கு ரூபா 3,080,000 பெறுமதியான 800 கிலோகிராம் விதை பெரிய வெங்காயம் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. அந்த விதை பெரிய வெங்காயம் முளைத்திருக்காமை காரணமாக பருவகாலத்தில் பெரிய வெங்காய பயிர்ச்செய்கை செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட 3,200,000 கிலோகிராம் பெரிய வெங்காய விளைச்சல் முழுமையாக இழக்கப்பட்டிருந்தது. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் போதியளவு மதிப்பீடு மேற்கொள்ளப்படாது பொறுப்பற்ற வழங்குனர்கள் தெரிவுசெய்யப்பட்டிருந்தமையால் இந்த வெங்காய செயற்திட்டம் தோல்வியடைந்திருந்தது.

(இ) ஆரம்ப பள்ளிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கெபிதிகொல்லாவ பிரதேச செயலக பிரிவில் அமைந்துள்ள விஹார ஹல்மில்லேவ வித்தியாலய புதுப்பித்தலுக்கான செயற்திட்டத்தின் பங்களிப்பு ரூபா 500,000 தொகையும் மக்கள் பங்களிப்பு ரூபா 209,765 தொகையும் உள்ளடங்கலாக ரூபா 709,765 முழுமையான தொகை 2013 ஆகஸ்ட் மாதத்தில் செலவிடப்பட்டிருந்தது. 2014 சனவரி மாதத்திலிருந்து இப் பாடசாலை மூடப்பட்டிருந்தமையால் ரூபா 500,000 ஆன செயற்திட்டப் பங்களிப்பு பயனற்ற செலவினமாகியிருந்தது.

(ஈ) கல்நேவ பிரதேச செயலக அதிகாரப் பிரிவிலுள்ள கலாமெதவச்சி உஸ்ஸான நீர் வழங்கல் திட்டத்திற்கு ரூபா 7,884,141 கொடுப்பனவு செய்யப்பட்டு வேலைகளில் அரைவாசி பூரணப்படுத்தப்பட்டிருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டில் எஞ்சிய வேலைகளிற்காக நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருக்காமை காரணமாக செயற்திட்டத்தின் இறுதிவரை செய்யப்பட்ட செலவினத்திலிருந்து எவ்விதப் பயனும் கிடைத்திருக்கவில்லை.

## 1.14 முகாமைத்துவ நலிவுகள்

தெரிவுப் பரிசோதனைகளில் பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வட மத்திய மாகாண சபை உத்தியோகத்தர்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்த மாவட்டச் செயலகத்திற்குச் சொந்தமான 14 உத்தியோகபூர்வ இல்லங்களிலிருந்து உத்தியோகபூர்வ இல்லங்களிற்கான வாடகை அறவிடுதல் உள்ளடங்கலாக இல்லங்களின் மேற்பார்வை ஏறத்தாழ 10 ஆண்டுகளாக மாவட்டச் செயலாளரின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்டிருந்தது. அந்த இல்லங்களிற்காக மீளாய்வாண்டில் வீத வரிகள் மாவட்டச் செயலாளரினால் மாநகர சபைக்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த வீடுகளை மீளக் கையேற்பதற்கு அல்லது வட மத்திய மாகாண சபைக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 சிறு போகத்திலும் 2012/2013 பெரும் போகத்திலும் நெல் கொள்வனவு செய்வதற்காக பொதுத் திறைசேரியினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 200,000 தொகை 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 1.15 மனித வள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளவாறான பதவியணியும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளவாறான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதி எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 73 | 61 | 12 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 45 | 20 | 25 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 1,331 | 1,077 | 254 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 233 | 209 | 24 | - |
| (v) | ஏனையோர் (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 08 | - | 08 |
| | மொத்தம் | 1,682 | 1,375 | 315 | 08 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் காணப்பட்ட 315 வெற்றிடங்களை நிரப்புவதற்கு மாவட்டச் செயலகம் தவறியிருந்தது.